# நீங்கள் உங்கள் நித்தியத்தை தேவனோடு செலவிடுவீர்கள் என்று எப்படி நிச்சயமாக சொல்கிறீர்கள்? நிகழ்ச்சி -1

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கர்பர்க் நிகழ்ச்சியில், எப்போதும் கேட்கப்படும் முக்கியமான மதம் சார்ந்த கேள்வி: "உங்களுடைய நித்தியத்தை தேவனோடு செலவிடுவீர்கள் என்ற நிச்சயம் இருக்கிறதா?"

**டாக்டர். எர்வின் லட்சர்:** நீங்கள் மரித்த அடுத்த விநாடியில் நீங்கள் ஒருவேளை அழகான சூழலை, கிறிஸ்துவின் மகிமையை பரலோகத்தை காண்பீர்கள். அல்லது நீங்கள் இன்று கற்பனை செய்து பார்க்க முடியாத பயங்கரமான சூழலை காண நேரிடும். அதை குறித்து யோசிப்பதை நிறுத்திவிட்டாலும், நமக்குள் எழும்பும் முக்கிய கேள்வி இதுதான், "என்னுடைய நித்தியத்தை எங்கே செலவிடப்போகிறேன்?"

**அறிவிப்பாளர்:** இந்த கேள்விக்கு பதிலளிக்க இருப்பவர், ஜானுடைய இன்றைய விருந்தினர் டாக்டர். எர்வின் லட்சர், மூடி மெமோரியல் திருச்சபையின் தலைமை போதகர் சிக்காகோ, இலினாசிஸ்.

அவர் நாம் இன்றைக்கு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் நாளை இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்றென்றைக்கும் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்ற நிச்சயம் அடைவது எப்படி?

மேலும் சில கேள்விகளுக்கும் பதிலளித்திடுவார்:

ஆதியில் தேவனோடு உறவு வைத்து விசுவாசிகளாக இருந்து பின்னர் தங்கள் வாழ்வில் விசுவாசித்திலிருந்து பின்வாங்கியவர்களைக் குறித்து வேதம் என்ன போதிக்கிறது?

ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய பாவங்களை அறிக்கையிடாமல் மரிக்கும்போது தேவனுக்கு அவனுக்காக செய்த செயல்களை அவை ரத்து செய்திடுமா?

இந்த பிரத்தியேக நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம் இது ஜான் அன்கர்பர்க் நிகழ்ச்சி.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு வரவேற்கிறோம். யாரும் பேசக்கூடிய மிக முக்கியமான தலைப்புகளைக் குறித்து நாம் பேசிக்கொண்டு வருகிறோம்: உங்களுடைய நித்தியத்தை தேவனோடு செலவிடுவீர்கள் என்ற நிச்சயம் உங்களுக்கு இருக்கிறதா. அதாவது, இதை தவிற முக்கியமானது என யோசிப்பதற்கு ஏதேனும் இருக்கிறதா? என்னுடைய நண்பர் டாக்டர் எர்வின் லட்சர், மூடி மெமோரியல் திருச்சபையின் போதகர் சிக்காகோ. பல வருடங்களாக

ஒருவரையொருவர் அறிந்திருக்கிறோம், இந்த தலைப்பிலான அவருடைய புத்தகங்களை வாசித்திருக்கிறேன் அதனால் நிச்சயம் சொல்வேன், நேயர்களே, நான் படித்தவற்றில் அவருடைய புத்தகங்கள் மிகவும் சிறப்பான ஒன்று. இன்றைக்கு எங்களுடையநோக்கம் இந்த கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்துகொள்வது தான். எர்வின், இதிலிருந்து ஆரம்பிக்கலாம். எதனால நித்தியத்தை நாம் எங்கே செலவிடபோகிறோம் என்ற உறுதி இருக்கிறதா என்ற கேள்வி முக்கியமானதாக இருக்கிறது?

**லட்சர்:** சரி, ஜான், நான் சொல்ற மாதிரி யோசிங்க. நீங்க மரித்த அடுத்த நிமிஷம், நீங்க ஒருவேளை அழகான சூழலையும் கிறிஸ்துவின் மகிமையையும் பரலோகத்தையும் பார்க்கலாம், அல்லது அதற்கு மாறாக இன்றைக்கு நினைத்துகூட பார்க்க முடியாத பயங்கரமான சூழலை பார்க்கலாம். அதாவது, இதை பற்றி யோசிக்காம இருக்கமுடியாது, நாம் கேட்கும் கேள்விகளில் முக்கியமானது இதுதான் நமது நித்தியத்தை எங்கே கழிக்கப்போகிறோம். எனக்கு பேஸ்லி பாஸ்கலுடைய சொற்கள் நினைவிற்கு வருகிறது அவர் சொன்னார் இந்த உலகில் புத்தியுள்ளவர்கள் இரண்டு பேர்தான். அதில் முதலாவது நபர் யாருன்னா தேவனை தன் முழு இருதயத்தோடும் முழு மனதோடும் நேசிப்பவன் ஏன்னா அவன் அவரை அறிந்துகொண்டான். அடுத்த நபர் யாருன்னா அவரை தனது முழு

மனதோடும், இருதயத்தோடும் ஆத்துமாவோடும் தேடுகிறவன் ஏன்னா அவன் அவரை அறிய விரும்புகிறான்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா. பயங்கரமான சிந்தனை. அதாவது உங்க புத்தகத்துல இருக்கிற ஒரு காரியம், அதில நீங்க, " நீங்க மரித்த பின்பு 5 நிமிடம் கழித்து, நீங்க அனுபவிப்பவைகள், உங்களுடைய எதிர்காலம் மாற்றியமைக்க முடியாத மாற்றமில்லாத நித்தியம் என்பதை உணருவதாக சொல்றீங்க." இரண்டாவது வாய்ப்பே இல்ல, அடுத்த வாய்ப்புக்கு இடமில்ல. அந்த நேரத்தில் தலையெழுத்த மாற்ற முடியாது. அப்படின்னா நாம முடிவெடுக்கவேண்டிய நேரம் எது.

**லட்சர்:** அதாவது இப்ப, ஜான், நான் ஒரு புத்தகநிலையத்திற்கு போய் நா ஐரோப்பா போரதால அதைப் பற்றிய புத்தகத்த வாங்க போறேன். அதாவது, நா போற இடத்தப்பற்றி தெரிந்துகொள்ள நினைக்கிறேன், சரியா? நாம் எல்லாருமே அப்படிதா. இன்னும் சில ஜனங்கள் நித்தியம் என்று ஒன்று இருப்பதையும் இந்த பூமிக்கு வெளியில் நித்தியமாக வாழப்போகும் ஒரு இடமிருப்பதையும் நினைக்க தவறுகிறார்கள். நாம் எதை நோக்கி செல்கிறோம் என்பதை அறிந்திருக்கவேண்டியது மிகவும் அவசியம். நற்செய்தி என்னவென்றால் அதற்கான வழியை அறியமுடியும் அதை நம்பவும் முடியும்.

**ஆன்கர்பெர்க்:** ஆமாம். அதே சமயத்தில், நீங்க டலினாலால் ஏற்பட்ட லின் பயங்கரமான சம்பவத்தை மக்களோடு

பகிர்ந்துகொள்ளவேண்டும் ஜனங்கள் தவறான விசுவாசத்துடனிருப்பதை விளக்குகிறது. இது நினைக்கவே மிகவும் கொடுமையான விஷயமாக இருக்கிறது, ஆனா நாம சரியான பாதையை அறிந்துகொண்டு இந்த நிலைமாறிய விசுவாசத்தை சரிபடுத்திட முயற்சிக்கலாம். தேவனில் நம்பிக்கையாக இருக்கிறவர்கள் கூட, தாங்கள் பரலோகம் செல்ல இருப்பதாக நினைக்கிறார்கள், ஆனா அப்படி கிடையாது - அவர்கள் பரலோக வாசலில் இருந்து திருப்பிவிடப் படுவாங்க. படிபடியாக சொல்லுங்க. டலினாலப் பத்தி சொல்லுங்க.

**லட்சர்:** நா எப்பவும் சொல்வேன், ஜான், விசுவாசம் உங்களை அழித்திட கூடும். இன்றைக்கும் இந்த நிகழ்ச்சிய பார்க்கிறவர்களில் அநேகர் அசைக்க முடியாத விசுவாசத்தோடு இருந்தாலும் இரட்சிப்பில்லாம இருந்தா அந்த விசுவாசம் அவர்களை அழித்திடும்.அதாவது, 1982களில் டலினாலுடைய சம்பவம் நாங்க இருக்கும் சிக்காகோவில் நடந்தது. என்ன நடந்ததுன்னு சொன்னா, யாரோவொரு நபர், இன்றைக்கு வரைக்கு அவன் யாரென்று யாரும் கண்டுபிக்கலன்னு நினைக்கிறேன், அவ சில டலினால் மாத்திரைகள எடுத்து அதில் சைனடை கலந்திருந்தான். அதன் விளைவாக சுமார் 7 பேர் மரித்துப்போனார்கள். அவங்களுக்கு தலைவலி அல்லது வேறு காரணத்திற்காக இந்த டலினால சாப்பிட்டிருக்காங்க, அதன் முடிவு அவர்கள் மரணம். இப்ப, இந்த அனுபவத்திலிருந்து நாம இரண்டு முக்கியமான பாடங்களை கற்றுக்கொள்கிறோம். முதலாவதாக

உலகத்தின் மேல் வைத்திருக்கும் விசுவாசம் எந்த தீய காரியத்தையும் நன்மையான காரியமாக மாற்றியமைத்திட முடியாது. அதாவது, இவங்க எல்லாரும் டலினால் சாப்பிடுவதாக தான் நம்பினார்கள், மேலும் அப்படி செய்வதற்கு அவர்களுக்கு திட நம்பிக்கை இருந்தது, ஆனா அவர்களுடைய நம்பிக்கை அந்த மாத்திரையை டலினாலாக மாற்ற முடியல அது சைனடாகவே இருந்தது. இது மிக முக்கியமான பாடம்.

ஆனா இரண்டாவது பாடம் இன்னும் பயங்கரமானது: சிலவேளைகளில் நிழலான விசுவாசம் உண்மையை போல காணப்படும். ஏனென்றால் நா சொன்ன, கண்முன்பாக, அந்த சைனட் டலினாலப்போலவே காணப்பட்டது. அதைப் போலவே தான், சில ஜனங்களுக்கு விசுவாசம் இருக்கிறது - தேவனிடத்தில் விசுவாசமிருக்கிறது தேவனை அவர்கள் முழுமையாக நம்புகிறார்கள் அதனால் பரலோகம் செல்வோமென எதிர்பார்க்கிறார்கள் - ஒருநாள் பரலோகத்தின் வாசல் அவர்கள் முகங்களுக்கு முன்னால் அடைக்கப்படுவதை காண்பார்கள். அதாவது, இயேசு ஒரு சம்பவத்தை மத்தேயு 7ம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறார், அது ரொம்ப முக்கியமான விஷயம் அதனால இப்ப அதை வாசிக்கலாம் என்று நான் நினைக்கிறேன். ஏன்னா உங்களுடைய பிரயாணத்தை காற்றி திசைதிருப்பிக்கொண்டிருந்து போதும்.

**ஆன்கர்பெர்க்:** நாம இப்ப எதற்காக வேதத்தை கவனிக்கவேண்டும் என்று சொல்கிறேன் சில ஜனங்களுடைய கருத்து, "ஒரு நிமிஷம் இருங்க, எர்வின். இந்த விஷயத்தில் உங்களை ஒன்று கேட்கனும். உண்மையில், தேவனில் எனக்கு விசுவாசம் இருந்தும் என்னால் பிரவேசிக்க முடியாமல் போகுமா? அதைப் பற்றி வேதம் என்ன சொல்கிறது என்கிறார்கள்.

**லட்சர்:** உங்களுக்கு தெரியுமா ஜான், இது அதை விட மிகவும் பயங்கரமானது. நீங்க கிறிஸ்துவை விசுவாசிக்கிறவராக இருந்தும் அதில் பிரNவிக்காமல் இருக்கமுடியும்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட். அந்த வசனங்களை வாசித்து அதை எங்களுக்கு சொல்லுங்க.

**லட்சர்:** இதோ இருக்கிறது. இயேசு பேசிகிறார் மத்தேயும் 7:21-23. "என்னை நோக்கி கூப்பிட்டு, கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்கிறவன் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை, பதிலாக என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகத்தில் பிரவேசிப்பான். ஆந்நாளில் அநேகர் என்னை நோக்கி, கர்த்தாவே, கர்த்தாவே, உம்முடைய நாமத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தோம், உம்முடைய நாமத்தில் பிசாசுகளை துரத்தினோம் அநேக அற்புதங்களை செய்தோம் அல்லவா, என்பார்கள் அப்பொழுது நான், ஒருகாலும் உங்களை

அறியேன். அக்கிரமச் செய்கை காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்பேன்.

இங்குள்ளவர்கள் மக்களுக்கு உதவியாயிருக்கும்படி சில அற்புதங்களை அவர்கள் செய்திருக்கிறார்கள். அதாவது, அவர்கள் பிசாசுகளை துரத்தினார்கள் என்பதற்கு ஆதாரங்கள் இருக்கிறது, அற்புதங்களை செய்தார்கள். அவர்களுடைய தீர்க்கதரிசன வார்த்தைகள் நிறைவேறியிருக்கு, தாங்கள் பரலோகத்திற்கு செல்வோமென்ற எதிர்பார்ப்போடு இருக்கிறார்கள். இந்த வகையான மக்கள் எல்லாருமே, உண்மையில், சபைக்கு தாமதமாக வந்து பின்னால உட்கார்ந்து ஆசீர்வாதம் கூறி முடிப்பதற்கு முன்பே வெறியேறுகிறவர்கள் அல்ல. இந்த வகையானவர்கள் ஆவிக்குரிய வாழ்வில் முதன்மையான நிலைகளில் இருப்பவர்கள் தான். ஒருவேளை நாம இப்படி யோசிக்கலாம், "ஆமா, சரி, ஆனா அவங்க, போலித்தனமானவங்க. அவங்க வெறும், அதாவது, முனையை விட்டு விலகியிருக்கும் கூட்டத்தை சேர்ந்தவர்கள்." நாம் கவனிக்கவேண்டியது இது கிடையாது. என்னுடைய கருத்துப்படி இயேசு இங்க என்ன சொல்ல விரும்புகிறார் என்றால் இப்படிபட்ட நம்பிக்கையோடு இந்த வாழ்க்கையில் பிரபலமான ஊழியங்களை கொண்டிருப்பவர்களுக்கு ஒருவேளை பரலோகத்தின் வாசல்கள் இவர்கள் முகத்திற்கு முன்பாக அடைக்கப்படலாம், நம்மைப்போன்ற சாதாரமானவர்களில் எத்தனை பேர் அதை அடையாமல் போவதை கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

ஒருவேளை நாம் அதில் பிரவேசிக்காவிட்டால், அதற்கு காரணம் அவர்களுக்கு சொல்லப்பட்ட காரணமாகவே காணப்படும்.

**ஆன்கர்பெர்க்:** அது என்ன?

**லட்சர்:** இடமாறிய விசுவாசம்

**ஆன்கர்பெர்க்:** ஞாயிற்று கிழமைகள் தோறும் சபைக்கு வருகிற ஜனங்கள் - ஒருவேளை உதவியாளராக இருந்திருக்கலாம், ஒருவேளை அவர்கள் ஞாயிறு பள்ளி பாடசாலையில் போதிக்கிறவராக இருக்கலாம், ஒருவேளை பாடல் குழுவில் இணைந்து பாடுபவராக இருக்கலாம் - அப்படி செய்வதால் அவர்கள் பரலோகம் செல்வோமென எதிர்ப்பார்க்கிறார்கள். இப்ப, இப்படி சிறந்த கிறிஸ்தவர்களாக காணப்படுகிற இவர்கள் அதில் பிரவேசியாமலிருக்க காரணம் என்ன மேலும் ஆச்சரியமூட்டும் விதத்தில் இயேசு அவர்களுக்கு முன்பாக பரலோக வாசலை அடைத்து, என்னைவிட்டு அகன்று போங்கள் என்கிறார். அவர்கள் செய்த தவறு என்ன?

**லட்சர்:** நான் சொல்ல விரும்பும் முதல் காரியம், இந்த முழு தொடருக்கும் தலைப்பாக இருக்கும் ஏனென்றால் நாம் பேசப்போகிற காரியம் சுவிசேஷமும் இயேசு கிறிஸ்துவிலுள்ள விசுவாசமும், நம்மை இரட்சிக்கும்படியான விசுவாசம். இந்த ஜனங்களுக்கு அற்புதங்களை செய்யும் திறனை பெறுவதற்காக தேவன் மீது விசுவாசம் இருந்தது - ஏனென்றால் அவர்களாகவே அற்புதங்களை

செய்தார்கள். அவர்கள் ஒருவேளை தேவனிடத்திலிருந்து பெற்றிருந்த வெளிப்பாடுகளோடு இருந்திருக்கலாம் - தீர்க்கதரிசனங்கள். அவர்கள் புரிந்துகொள்ளாத விஷயம் என்னவென்றால் இயேசு கிறிஸ்து வந்ததற்கான நோக்கம். இப்போதும் நாம் அவர்கள் அந்த நாட்களில் அதை கண்டிறாத விதத்தில் அதன் உண்மையை நாம் புரிந்துகொள்ளப் போகிறோம். இயேசு கிறிஸ்துவின் மரணம் - பலியிடப்படவேண்டிய அவசியம். எந்த ஒரு பலி செலுத்தப்படாமல் தேவனை அனுக முடியாது என்ற உண்மை, இரத்தமின்றி முடியாது.

அதாவது, இன்றைக்கு, ஜனங்களுக்குள் பரவலாக காணப்படும் கருத்து, “சரி, உண்மையில், இந்த விதத்தில் நான் தேவனை செயல்படுத்துகிறேன், இப்படிப்பட்ட விதத்தில் தேவனோடு இணைகிறார்கள், எல்லாமே அப்படிதா. சரி, எளிமையாக சொன்னால், ஜான், தேவனிடத்திற்கு செல்ல ஒரே வழிதான் அது ஏன் என்று விளக்கிடலாம்.

**ஆன்கர்பெர்க்:** இதை கொஞ்சம் கவனிக்கலாம், எர்வின், ஏன்னா இதை பார்த்துக்கொண்டிருப்பவர்களில் சிலர் ஒருவேளை கேட்கலாம், “ஒரு நிமிஷம் இருங்க. இதை என்னால ஏற்றுக்க முடியாது ஏன்னா இப்படிதான் தேவனிடத்தில் சேர முடியுன்றது என்னுடைய கருத்து என்றிடலாம்.” ஓகே? இப்ப இயேசு அவர்கள் அதில் பிரவேசிப்பதில்லை என்கிறார், ஆனா இப்ப ஏன்  அவர்களுக்கென்று ஒரு வழியை வைத்துக்கொண்டு செயல்படகூடாதென்று சொல்லுங்க - ஏன்னா

மெய்யான தேவன் தம்முடைய திட்டத்தை வைத்துக்கொண்டு காத்திருக்கிறார்;;.

**லட்சர்:** அதுதான் சரி.

**ஆன்கர்பெர்க்:** இப்ப, அதைபற்றி சொல்லுங்க.

**லட்சர்:** சரி, இதைப் பற்றி நாம் இன்னும் அதிகமாக இப்போது பார்க்கப்போகிறோம் ஆனா இதை ஒரு மாத்திரை அளவாக சொல்லவேண்டுமானால், எளிமையாக சொன்னால், இயேசு ஒருவரே தகுதிநிறைந்த இரட்சகர். அவரையனறி வேறொருவரும் இல்லை. நான் உலக மதங்களின் பாராளுமன்றம் சிக்காகோவில் 1993ல் பங்குபெற்றேன் அதன் கீழ்தளத்தில் பால்மர் ஹவுசில் சுமார் 100 மையங்கள் உலகமெங்கும் அப்போதிருந்த மதங்களை பிரதிபளிக்கும்படி அமைந்திருந்தன. நா இந்த மையங்களில் பலவற்றை அனுகி அவர்களிடம் கேட்டேன், “ பாவமில்லாத இரட்சகர் உங்களுக்கு இருக்கிறாரா? ஏன்னா நா ஒரு பாவி நான் இரட்சிக்கப்படவேண்டும், என்னைப்போலவே பாவம் நிறைந்த ஒருவர் எனக்கு உதவிட முடியாதே என்று சொன்னேன்.” உங்களுக்கு தெரியுமா, ஜான், என்னால ஒரே ஒரு இரட்சகரக் கூட பார்க்க முடியல.” அங்க பார்க்க முடிந்த ஒரே காரியம் குருக்களும் தீர்க்கதரிசிகளும்தான் இந்த வழி அந்த வழி என்றார்கள்”… அதாவது, எட்டுவிதமான வழிகள், நான்கு விதமான வழிகள். என்னை இரட்சிக்க தகுதியான ஒருவரை நான் அங்கு

காணவில்லை. இயேசு தான் மெய்யான இரட்சகர் என்பதற்கு காரணம் என்னவென்றால் தேவன் அங்கிகரிக்கும் நீதி அவர் ஒருவரிடம் மட்டும் தான் இருக்கிறது என்னை அவர் ஏற்றுக்கொள்ள அது தான் எனக்கு தேவை. அது இல்லாமல் நான் ஒன்றுமில்லை, மேலும் நான் நல்லவன் என்பதோ எவ்வளவு ஜாக்கிரதையாய் செயல்படுவன் என்பதோ எத்தனை தீர்க்கதரிசிகளை நம்பியிருக்கிறேன் என்பதோ எத்தனை அற்புதங்களை என்னால் செய்ய முடிந்திருக்கிறது என்பதோ முக்கியமில்லை.

**ஆன்கர்பெர்க்:** நேற்று இரவு நாங்க பேசிக்கொண்டிருந்தோம், எர்வின், இவைகளை கடந்துசெல்லும் மக்கள் இறுதியில் தேவன் இருப்பதை ஒருவேளை பார்க்கலாம். நா உங்ககிட்ட சொன்ன மாதிரி லேவியராகமத்தையும் எபிரேயரையும் இணைத்து வாசித்தேன், லேவியராகத்தை வாசிக்கும்போது, நான் சொன்ன மாதிரி, நான் ஏற்கனவே மரித்துவிட்டேன், அங்க சொல்லப்பட்ட பாவங்களால, பழைய ஏற்ப்பாட்டின் தேவன், ஒருவேளை அந்த பாவங்களை செய்தால், மரணம் நிச்சயம். கொல்லப்பட்டிருப்பீர்கள்.ஓகே?

மேலும் புதிய ஏற்ப்பாட்டில், எபிரேயருக்கான நிருபம் இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களை ஏற்றுக்கொண்டு நமக்காக மரித்தினாலே நாம் மரிப்பதில்லை என்று அதன் காரணத்தை கூறுகிறது. (எபி. 10:5-10)

**லட்சர்:** மேலும், ஜான், கிறிஸ்துவை நிராகரிப்பவர்களுக்கு, புதிய ஏற்ப்பாட்டில் சொல்லப்பட்டிருக்கும் தண்டணை பழைய ஏற்ப்பாட்டின்

தண்டணையை விட பலமடங்கு அதிகம். சிலவேளை ஜனங்கள் சொல்வார்கள், “சரி, உண்மையில், பழைய ஏற்ப்பாட்டின் தேவன் மிகவும் பயங்கமானவர் கடுமையானவர். ஹா, ஆனா இயேசு ஒருவரையும் நரகத்திற்கு அனுப்ப விரும்பிடாத அன்பான தேவனை நமக்கு அறிமுகம் செய்கிறார்.” எபிரேயர் புத்தகத்தில் என்ன சொல்லப்பட்டிருக்குன்னு தெரியுமா? “இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்று இருப்போமானால் தண்டனைக்கு எப்படி தப்பித்துக்கொள்வோம்?” (எபி. 2:4) இந்த பகுதியில் தங்கள் இரட்சிப்பை நிராகரித்தவர்களை பார்க்கிறோம், தேவனோடு இணைந்த மதசடங்குகளை அறிந்த மக்களாக இருப்பவர்கள் தான்.

இப்ப, இன்னும் ஒரு நிமிடம் இந்த வசனத்தை நாம் கவனிக்க வேண்டும் என நினைக்கிறேன், “இது எப்படி இருக்கும்?” கற்பனை செய்ய முடியுமா? என்னுடைய புத்தகத்தில் சேற்றில் சிக்கிய ஒருவரது உதாரணத்தை சொல்லியிருக்கிறேன் அவர் ஒரு விமான விபத்தில் சிக்கியவர் பிழைத்தவர்கள் பல இருந்திருக்கலாம் ஆனால் இங்கு அவர் மட்டும் இருக்கிறார். மீட்பு விமானம் அவருக்கு மேல் பறக்கிறது ஆனால் அவரை பார்க்கவில்லை, அவர் சேற்றில் மூழ்குகிறார் மரித்துவிடுவேன் என்பது அவருக்கு தெரியும். அதாவது, இவர்களுடைய அனுபவத்திற்கு அது இணையாக இருக்காது என்பது என்பது எனக்கு தெரியும். பரலோகத்தில் பிரவேசிக்க எதிர்பார்த்திருக்க உங்கள் முகத்திற்கு முன்பாக பரலோக வாசல் அடைக்கப்படுகிறது.

ஏன்? விசுவாசம் குறைவா இருந்ததாலா? இல்ல. இவர்களுக்கு அசையாத விசுவாசமிருந்தது, ஆனா தவறான திசையில் இருந்தது. அவர்கள் விசுவாசம் அவர்கள் வெளிபாட்டில் இருந்தது, அவர்கள் விசுவாசம் அவர்கள் தாளந்தில் இருந்தது, அவர்களுடைய அற்புதங்களில் இருந்தது. அவர்களுடைய விசுவாசம் இயேசு கிறிஸ்துவின் மேல் இருக்கவில்லை, அவர் ஒருவரே இரட்சிக்க தகுதியுள்ள இரட்சகர்.

**ஆன்கர்பெர்க்:** இப்போதும் ஒரு இடைவேளை எடுத்துக்கொள்வோம், நாம் திரும்பி வந்ததும், ஜனங்கள் விசுவாசத்தை இடமாறச்செய்திடும் மற்ற காரியங்களை குறித்து பார்க்கலாம். யாரெல்லாம் ஏணியின் குறுக்கு சட்டத்தில் மதவாத வழிகளில், கட்டுகதைகளை நம்பி, அறிவை நம்பி, ஏறுகிறார்கள் என பார்ப்போம். அதை பற்றி நாம் பேச இருக்கிறோம். ஒருவேளை அது நீங்கலாகவும் இருக்கலாம், உங்களுடைய நண்பர்களில் ஒருவராகவும் இருக்கலாம், இணைந்திருங்கள்.

*****

**ஆன்கர்பெர்க்:** தொடர்ந்திடலாம். நாம் ஒரு கேள்வியை பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம், “நீங்கள் தேவனோடு தான் நித்தியத்தை செலவிடுவீர்கள் என்ற முழு நிச்சயம் உங்களுக்கு இருக்கிறதா,” நம்முடைய விருந்தினர் டாக்டர். எர்வின் லட்சர், மூடி மெமோரியல் திருச்சபை போதகர் சிக்காகோ. எர்வின், நேரடியாக வருவோம்.

ஜனங்கள் இடமாறிய விசுவாசத்தோடு இருக்கிறார்கள்.அவர்கள் ஒருவேளை உண்மையாக இருக்கலாம். அவர்கள் தேவன் மீது கொண்டிருக்கும் விசுவாசம் அவர்களை பரலோகம் கொண்டு செல்லும் என நினைத்துக்கொண்டிருக்கலாம். நீங்க அவங்க கிட்ட இது மிகவும் ஆபத்தான ஒன்று என சொல்லுகிறீர்கள். ஒருவேளை அவர்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கலாம். அவர்கள் ஒருவேளை தவறானதை செய்திடலாம். நீங்க அவங்க கிட்ட கரிசனையோடிருந்து அவங்கள புரிய வைக்க முயற்சிக்கிறீங்க, “ஹேய், நீங்க பரலோகம் போறதுக்கு முன்னால இயேசு சொல்றது என்னதெரியுமா மத்தேயு 7:23, “ஐ ஏம் சாரி, உங்களை நான் அறியேன்,” இதுதான் அவருடைய செய்தியாக உள்ளது. இடமாறிய விசுவாசத்தை குறித்து இயேசு கூறிய இரண்டு வழிகளைப் பற்றி எங்களுக்கு சொல்லுங்க.

**லட்சர்:** சுரி, எல்லாருக்கும் தெரியும், இயேசு சொல்கிறார் கேட்டுக்குப்போகிற வாசல் வழி விசாலமாயிருக்கும், ஜீவனுக்கு போகிற வாசல் இடுக்கமும் நெருக்கமுமாயிருக்கும். (மத்தேயு 7:13-14) ஜீவனுக்கு போகிற வாசல் ஏன் இடுக்கமாக இருக்கிறது? ஏன்னா இது இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசம் என்னும் வழி, அதை விளக்கிடுவோம். ஆனால் விசாலமான வாசலில் அநேகர் செல்கிறார்கள். அதாவது, அநேக ஜனங்கள் அதில் அதிகமான மக்கள் இருப்பார்கள் என்பதை உணராமல் இருக்கிறார்கள் - வசனத்தின்படி, சொல்வதன் அர்த்தம் இதுதான் - பரலோகத்தைவிட நரகத்தில் தான்

அதிகமிருக்கிறார்கள். அதற்கு காரணம் என்னவென்றால் அது விசாலமான பாதை அதனால் அதிகமான வழிகள் இருக்கிறது. அதாவது, அது விசாலமான பாதையில் உங்கள் விருப்பம்போல எப்படிவேணாலும் போகலாம். சிலவேளைகளில் நான் சொல்வதுண்டு, "ஏணியில் ஏறுகிறவர்கள்" ஒருசிலர் சொல்வார்கள், "ஆமா, என்னுடைய நற்கிரியைகளினால் நான் தேவனிடம் செல்வேன்."

ஒருமுறை ஒரு விமானத்தில் இருந்தபோது ஒருவர் என்னிடம் அதை சொன்னார். நான் கேட்டேன், "உங்களுடைய நற்கிரியைகளால் நீங்கள் இரட்சிப்பை பெற முடியுமென்ற நிச்சயம் இருக்கா?

அதற்கு அவர் சொன்னார், "வெல், உண்மையில், இல்லை." மேலும் அவர், எனக்கு பயமாயிருக்கு என்றார்."

நா கேட்டேன், " உங்களுக்கு என்ன பயம்?"

அவர் சொன்னார், "நியாயத்தீர்ப்பு நாளில் மதர் தெரேசாவிற்கு பின்னால நின்னு தேவன் அவங்ககிட்ட செல்றத ஒட்டுக்கேட்பது போல, "ஸ்தீரியே இன்னும் பெரிதானவைகளை நீ செய்திருக்கலாம், அடுத்தது நாதான்!. ஏன்னா ஏதோவொரு விஷயம் நமக்குள்ளிருந்து நம்ம என்ன தா செய்தாலும் இவை எல்லாம், மறைந்துவிடும் என்பதை உணர்த்துகிறது. நம்முடைய நோக்கம் நல்லதென்று நினைக்கிறேன், ஆனா அப்படியல்ல, நாம் பாவிகள். ஏளிமையான உண்மை என்னன்னா தேவன் மகா பரிசுத்தராயிருக்கிறார்;. அதாவது, ஜான், இன்றைய சமுதாயத்தில், பரலோகத்திற்கு செல்லும்படியான இத்தனை வழிகளில்

இருக்கும் அடிப்படை பிரச்சனை என்னன்னு கேட்டா என்னுடைய பதில், தேவனுடைய பரிசுத்தத்தை தவறாக எடைபோடுகிறோம் என்பதுதான்.

ஒருவர் சொன்னார், அதாவது, “பால் கொடுக்க மாடுகள் இருக்கு. கம்பளிமயிர் கொடுக்க ஆடு இருக்கு. நம்முடைய விருப்பங்களை நிறைவேற்ற நம்மோடு வந்து அவைகளை நடப்பிக்க தேவன் இருக்கிறார்.” தேவனை நம்முடைய கற்பதைக்கேற்ப வைத்துவிட்டோம். அவர் அமைதியாக செயல்படுகிற தேவன், அதற்கு நாம் சரியான வாழ்க்கை வாழ வேண்டும்.

சரி, முதலாவதாக, ஒருவரும் சிறப்பாக வாழ்வதில்லை ஏனெனில் நாம் எல்லாரும் பாவிகள். ஆனால் இரண்டாவதாக, ஜான் - இதுதான் நற்செய்தி - இன்றைக்கு இந்த பிரச்சனையில் இருப்பவர்கள் இதை கேட்கலாம் அதிக பாவம் செய்தவர், கொடூரமான தவறுகளை செய்தவர். தொடர்ந்து ஏணியில் ஏற அவருக்கு என்ன வாய்ப்பு இருக்கிறது? சுவிசேஷத்தின் நற்செய்தி இதுதான் அவனுக்காக இயேசு கிறிஸ்து வந்தார் - அவர் மகா பாவிகளுக்காக வந்தார். அதனால் தான் ஏணி ஏறுகிறவர்களுக்கு சொல்கிறோம், இரட்சிப்பிற்கான மற்ற வழி தவறான வழி. அவர்கள் விசாலமான பாதையில் இருக்கிறார்கள், இயேசு சொன்னது போல, அது கேட்டுக்குப்போகிற வழி.

**ஆன்கர்பெர்க்:** நீங்க உங்க புத்தகத்தில் பார்னா ஆராய்ச்சி அறிக்கையை சொல்கிறீர்கள் அதில் அமெரிக்கர்களில்

பெரும்பாலானோர் பரலோகம் செல்ல தகுதியுள்ளவர்கள் என நம்புகிறார்கள் என்கிறீர்கள், மேலும் பலவிதமான மத சடங்குகள் தவறான அதிர்ச்சியை நோக்கி நடத்துகிறது என்றும் சொல்கிறீர்கள்.

**லட்சர்:** வெல், நீங்கள் நல்லவராக உலகத்துக்குரியரா இருக்கலாம், அதாவது, தேவனை விசுவாசியாமல் இருக்கலாம். என்னன்னா, நாத்திகளும் நல்லவராக இருக்கமுடியும் ஏன்ன தேவ சாயல்லதா சிருஷ்டிக்கப்பட்டிருக்காங்க. அவங்க நற்கிரியைகளை செய்ய முடியும்.ஆனாலும், இன்னொரு விதத்தில் பார்த்தால், மத சடங்குகள் இருக்கிறது. இவையனைத்தும் அருமையான இரண்டு காலணிகள்." அதற்கு ஒப்பிடலாம் என நினைக்கிறேன், அதாவது, எந்த தவறுமே இதுவரை செய்யாதவர்கள் என்றிருப்பவர்கள் சபைக்கு தவறாமல் போய் வருபவர்கள், அவர்கள் தங்கள் பணங்களை கொடுக்கிறார்கள் மற்ற கிரியைகளை செய்கிறார்கள். அவர்கள் பலர் அழிந்துபோகிறவர்களாகவும் இருக்கிறார்கள். உண்மையை சொன்னால், அவர்கள் அழிந்துபோவார்கள், அவர்கள் நல்லவர்கள் அல்ல என்பதினால் அல்ல, ஆனால் அவர்கள் தகுதியானவர்களாக காணப்படாததினால் அப்படியாகும். ஏனென்றால், அடுத்த நிகழ்ச்சியில் அதை நாம் கண்டறியப்போகிறோம், தேவன் பரிபுரணத்தை மட்டுமே ஏற்றுக்கொள்கிறார். அதற்கு தான் அவருடைய குமாரன் அவசியம். அதனால் தான் சில மத சடங்குகள் இருப்பினும் நாம் முதலில் வாசித்த வேத பகுதியை கவனிக்கவேண்டும், இவர்கள் இயேசுவின்

நாமத்தில் பிசாசுகளை துரத்தினார்கள் தீர்க்கதரிசனம் சொன்னார்கள், அதாவது, இவை மத சடங்குகளுக்கு ஒப்பாகும், அவர்கள் பரலோகத்திற்குள் பிரவேசிக்காததை காண்பதோடு இயேசுவின் வார்த்தையை கேட்கிறார்கள், “ என்னைவிட்டு போங்கள்.”

**ஆன்கர்பெர்க்:** இதை நாம் நிறுத்தி நிதானமாக பார்க்கலாம். இதற்கு உதாரணங்கள் இருக்குமென நினைக்கிறேன். ஜனங்கள் தாங்கள் நல்லவர்கள் என்று நினைத்துக்கொண்டிருப்பதால் பரலோகத்தில் பிரவேசிக்க மாட்டார்கள். அவர்களை பற்றி அவர்களே உயர்வாக நினைக்கிறார்கள். உங்களோட புத்தகத்தின் மற்றொரு பகுதியில் நீங்க சொல்லியிருக்கீங், “மற்றவர்களுக்கு எதிராக தங்களை தாங்களே மதிப்பிடும்போது, அவர்களுடைய நிலையை அவர்கள் உயர்த்திக்கொள்கிறார்கள் ஏனெனில், அவனை விட நான் சிறந்தவன் என்கிறார்கள்.” ஆல்ரைட், தாங்கள் சொல்வது உண்மை என்று சொல்லும் மக்களுக்கு எப்படி விளக்கமளிப்பீர்கள் - ஒருவேளை மற்றவர்களைவிட சிறந்திருக்கலாம் - ஆனால் தேவனுக்கு முன்பாக அவர்களுடைய பாவத்தை வைத்தால், அது மிகப்பெரிய பிழைதானே?

**லட்சர்:** சுரி, இ;நத உதாரணத்தை எடுத்துக்கலாம். சிக்காகோவில் சீயர்ஸ் டவர் இருக்கிறது. இப்ப, அந்த சீயர்ஸ் டவர் முதல் தேசிய வங்கியை விட பல மடங்கு உயரமானது. மேலும் அது எத்தனை அடி உயரம் எத்தனை அடி அகலம் என்று குறிப்பாக நம்மால் சொல்ல முடியும். ஆனா இந்த கேள்விய கொஞ்சம் மாற்றி கேட்கலாமே, “எந்த

கட்டிடம் சமீபத்திலிருக்கும் நட்சத்திரத்திற்கு அருகில் உள்ளது?" சில ஆயரம் ஒளி ஆண்டுகளுக்கு தூரத்தில் இருப்பதற்கு அருகில் - ஓ? அந்த கட்டிடங்களுக்கு இடையேயான வித்தியாசம் பெரிய விஷயமல்ல. இதை கவனிங்க, ஒருவேளை நாம் நம்மை நம்மோடும் நட்சத்திரத்தோடும் ஒப்பிட்டு நியாயப்படுத்துவதை நிறுத்திவிட்டு, தேவனால் நியாயந்தீர்க்கப்பட வேண்டும், அப்போது நமக்கிடயே உள்ள வித்தியம் சகிக்கக்கூடிதாயிருக்கும். அவை பெரிய விஷயம் அல்ல.

எனவே இதுதான், மனிதர்களிடையே காணப்படும் பிரச்சனையாக இருக்கிறது, அதை லூதர் அழகாக சொல்கிறார். ஜனங்கள் தங்களை ஜீவனுள்ளவர்களாகவும் நன்மை செய்கிறவர்களாகவும் காண்பித்திட அதிகம் முயலுகிறார்கள், மேலும், அவர்கள் புரிந்துகொள்ளாத விஷயம், அவர்கள் கண்கட்டப்பட்டவர்களாய் தாங்கள் பாவிகளாய் இருப்பதை உணராமல் இருக்கிறார்கள், தேவனுடைய பிரசன்னத்தில் நியாயந்தீர்க்கப்படுவதை அறியவில்லை.

அதாவது, ஒரு சிறுவன் தன்னுடைய தாயிடம் ஒருமுறை சொன்னான், "அம்மா," என்று சொல்லி, "நா எட்டு அடி உயரம்," அவன் அதை, தான் தயாரித்த அளவுகோலை வைத்து கணக்கிட்டான். ஜனங்கள் தவறான் தரத்தை வைத்து தங்களை மதிப்பிடுகிறார்கள். வேதத்தை கவனித்து பார்க்கும்போது, நீங்கள் அறிவது இதுதான், " எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையை இழந்தவர்களானோம்." (ரோம 3:23). தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொள்ள விரும்பமில்லாத ஜனங்கள் - மேலும்

வருங்காலத்தில் நாம் உண்மையாய் சொல்ல முடியும் என்ற நிலை உண்டாகும் - நல்லவர்கள் என்று சொல்கிறவர்கள் இப்படி விருப்பமில்லாமல் சபைக்கு செல்கிறவர்களாக காணப்படுவார்கள்.

ஆனா இன்னொரு விஷயம், இன்னொரு வகையான மக்களும் இருக்கிறார்கள், ஜான், குறிப்பாக நம்மை போல ஆவியில் முதிர்ந்தவர்கள், இவையனைத்தும் ஆவிக்குரிய வகைகள், கட்டுகதைகளை ஏற்பவர்கள். சிலர் இப்படியும் இருக்கிறார்கள் “தேவனோடு இணைத்துக்கொண்டு தேவனை அறிந்தவர்கள் என்று நினைத்துக்கொள்ள முயலுகிறார்கள். எளிமையாக சொன்னால், வேதம் சொல்கிறது, முதலாவதாக, துன்மார்க்கருடைய பாதையோ காரிருளைப்போலிருக்கும். தூங்கள் இடறுவது இன்னதில் என்று அறியார்கள். (நீதி. 4:19). ஆனால் வேதம் இதையும் சொல்கிறது ஜனங்கள் வஞ்சிக்கிறவர்களாக தங்களிடம் பாவமே இல்லை என்று சொல்லிக்கொள்பவர்களாய் இருப்பார்கள் (1 யோவான் 1:8). சிலவேளைகளில் இப்படிபட்டவர்கள் தான் பிரதான பாவிகளும் அநுக கடினமானவர்களாவார்கள். ஏதனால்? ஏனென்றால் அநர்கள் செய்த நற்கிரியைகளை அவர்கள் சார்ந்துகொண்டு நிற்கிறார்கள் மேலும் அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதன் அவசியத்தை புரிந்துகொள்வதில்லை, குடிவெறியில் விழுந்து கிடப்பவனைக் காட்டிலும் அதிக ஆபத்தில் இருக்கிறார்கள்.

**ஆன்கர்பெர்க்:** இன்னொரு விதத்தில் கேட்கிறேன், எர்வின். கர்த்தராகிய இயேசுவோடு மக்கள் எவ்வளவு நெருக்கமாக வர முடியும், உண்மையான விசுவாசம், பரலோகம் செல்லும்படிக்கு இருந்தும், விட்டுவிட்ட நிலை?

**லட்சர்:** அதாவது, உலக மதங்களின் பாராளுமன்றத்தில் நான் ஒரு பெண்ணை சந்தித்தேன் அவர்கள் படித்த யுரென்டியா புத்தகம் இயேசுவை அவள் மீண்டும் ஏற்றுக்கொள்ள செய்ததாம். அவள் இயேசுவை பற்றி அறிந்த இயேசுவை நேசிக்கும் குடும்பத்தில் வளர்ந்தால். அவள் சபைக்கு சென்றிருக்கிறாள், ஒரு சிறுமியாக அவள் அந்த அரங்கத்திற்குள் இருக்க அனுமதிக்கப்படவில்லை. மற்ற சிறுவர்களோடு அவளும் கீழ்தளத்திற்கு செல்ல அனுப்பப்பட்டாள். அவள் மேல் தளத்தில் இருக்க அனுமதிக்கபடாததினால், சபையிலிருந்து வெளியேறினவள் திரும்ப அங்கு செல்லவே இல்லை. இப்ப அவங்க சொன்னாங்க இந்த புத்தகம், இயேசுவை குறித்து சில சம்பவங்களை கூறியது, உண்மையாகவே, அவர் சிறுவனாக இருந்தபோது, அவங்க சொன்னாங்க, “இந்த புத்தகம் இயேசுவை எனக்கு திரும்ப அளித்திருக்கிறது.” அதிலிருந்து ஒரு கதையை எனக்கு வாசித்தாள் இயேசு எப்படி தன்னுடைய 12வது வயதில் மற்றவர்களுக்கு உதவினார் என்று வாசித்தாள். இப்ப, அவங்க அழ ஆரம்பித்தாங்க, நா அவளிடம் சொன்னேன், “ நீ உண்மையாகவே இயேசுவ நேசிக்கிற, அப்படிதானே?”

“ஓ” அவங்க சொன்னாங்க,” அவரை நேசிக்கிறேன்.”

அவங்க சொன்னாங்க, “ஒரு நண்பராக அவரை நேசிக்கிறேன். அவர் தேவன் அதனால் அவரை நேசிக்கிறேன். அவர் போதகர் அதனால் அவரை நேசிக்கிறேன்.”

அவளைப் பார்த்து நான் சொன்னேன், “பாவமில்லாத அந்த இரட்சகர் நமக்காக சிலுவையில் தொங்கி இரத்தம் சிந்தி பரிசுத்த தேவனோடு நம்மை ஒப்புரவாகச் செய்ததினால் அவரை நேசிக்கிறாயா?”

ஏன் கண்ணை பார்த்து பேசுவதை நிறுத்திவிட்டாள், அவங்க சொன்னாங்க, “ இதுவரைக்கும், நா இப்படி யோசித்ததே கிடையாது என்றாள்.” சரி, இயேசுவை நேசிக்கும் ஒரு பெண் இங்கிருக்கிறாள். இயேசுவை நேசிக்கும் பலர் இன்றைக்கு இதை கேட்டுக்கொண்டிருக்கலாம், ஆனால் இன்னும் அவர்கள் விசுவாசிகளல்ல ஏனெனில் கிறிஸ்து வந்ததன் நோக்கத்தை அவர்கள் இன்னும் நம்பாதிருக்கிறார்கள். அவர்களுடைய நற்கிரியைகள் உண்மைகள் தடைகற்களாயிருக்கிறது ஏன்னா அவர்களுடைய தேவையை மூடியிருக்கிறது. கவனிங்க, அவர்கள் நல்லவர்களாகவே இருக்கிறார்கள், எதிர்கால வாழ்விற்கு இரட்சகருடைய அவசியம் இருப்பதை மறந்துவிடுகிறார்கள், நாம் கிருபையின் தன்மையை குறித்து பேச இருக்கிறோம், இரட்சிக்கும் விசுவாசத்தின் தன்மை, முழு விசுவாசத்தோடு தைரியாக வரலாம் என்ற உண்மையை குறித்து பேச இருக்கிறோம். நியூட்டனை பற்றி நமக்கு தெரியுமா, விஞ்ஞானியாக

அல்ல, ஷேக்ஸ்பியரை பற்றி தெரியுமா, ஒரு எழுத்தாளனாக அல்ல. இயேசுவை பற்றி தெரிந்திருந்தும் அவரை நேசித்திருந்தும், அவரை இரட்சகராக தெரியாமல் இருக்கிறதா?

**ஆன்கர்பெர்க்:** ஓகே, ஒத்துக்கிறேன். இதை பார்த்துக்கொண்டிருப்பவர்களோடு இணைத்து ஜெபிக்காமல் இந்த நிகழ்ச்சியை முடிக்க நான் விரும்பவில்லை. சரி, உங்களில் சிலர், இதன் அடுத்த பகுதியை கேட்க அடுத்த வாரம் வரை காத்திருக்க விரும்ப மாட்டீர்கள். இயேசுவோடு ஒரு உறவை வைத்துக்கொள்ள விரும்புகிறீர்களா. நீங்கள் ஆபத்தில் இருக்கிறீர்கள் என்பதை உணர்ந்துகொள்ள எர்வின் இன்றைக்கு சொன்னதே போதுமானதுதான். இன்றைக்கும்  அடுத்த வார நிகழ்ச்சிக்கும் இடையில் நீங்கள் மரித்தால், நீங்கள் பரலோகத்தில் இருக்க முடியாது ஏனென்றால் தேவன் எதிர்பார்க்கும் விதத்தில் நீங்கள் இயேசுவை இன்னும் நம்பவில்லை. உங்களுக்கென்று சொந்த வழி, உங்க விருப்படி யோசிக்கிறீர்கள். எர்வின், நீங்க இப்ப ஜெபியுங்க ஜனங்கள் அதை பின்பற்றி அவர்கள் மேலும் கிரியைகள் மேலும் அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை அகற்றி அதை மாற்றியமைத்து, இயேசு மீது வைக்கட்டும்.

**லட்சர்:** அவர்கள் எனக்கு பின்னாக சொல்லட்டும்.

**ஆன்கர்பெர்க்:** அது சரியானது.

**லட்சர்:** ரைட், ஒன்றாக இணைந்து ஜெபிப்போம். "அன்பின் தேவனே, இயேசுவை இரட்சகராக இருக்கும்படி நீர் அனுப்பியதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன், என்னுடைய பாவத்தை சுமக்கிறவராக அவரை ஏற்றுக்கொள்கிறேன். எனக்காக மரித்தவர் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அவர் செய்திரியையினால் நான் இரட்சிக்கப்படுவதற்காக உமக்கு நன்றி, அவரை என்னுடையவராக நான் இப்பேர்து ஏற்றுக்கொள்கிறேன். அவருடைய நாமத்தில் ஜெபத்தை ஏறெடுக்கிறேன். ஆமென்."

**ஆன்கர்பெர்க்:** இதை குறித்து நாம் இன்னும் பல விஷயங்க ளஅடுத்த வாரம் பேச இருக்கிறோம், எர்வின், நாம் பேசப்போகிறவற்றை சொல்லுங்கள். ஏன் கிருபை மிகவும் அருமையானது?

**லட்சர்:** அநேகருடைய கருத்து கிருபை என்பது உதவியாக இருக்கும் என்று. அது அருமையானது. அது இருக்கவேண்டிய நல்ல விஷயம். நீங்க செய்வதை அது மெருகேற்றும். அவர்கள் புரிந்துகொள்ளாத விஷயம், கிருபை இவைகளைக் காட்டிலும் மிகவும் மேலானது. நீங்கள் கற்பனை செய்வதற்கும் மிகவும் மேலானது. அது அருமையான கிருபை.

**ஆன்கர்பெர்க்:** நேயர்களே, அவர் சொல்வதை நீங்கள் கேட்கும் போதும் வேதம் சொல்வதை கேட்கும்போதும், நீங்கள் அந்த இசையை

கேட்பீர்கள். உங்களுடைய ஆத்துமா தேவனுக்கு நன்றிகளை ஏறெடுத்திடும். எனவே அடுத்த வார நிகழ்ச்சியை பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.